**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.91/2019**

**PW-5**

17..02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. திவ்யா | | |
| க/பெ. | திரு. சங்கிலி | Calling | வீட்டுகுடித்தனம் |
| Village | முள்ளிக்கரும்பூர் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 29 /2026 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

**நான் தற்போது ஸ்ரீரங்கம் முள்ளிகரும்பூரில் வசித்து வந்து வீட்டுகுடித்தனம் நடத்தி வருகிறேன் . சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 09.30 மணிக்கு திருச்சி , மங்களன் மங்கள் கடையில் வேலை முடித்து விட்டு வேலைக்கு செல்வதற்காக சத்திரம் பேருந்து நிலையத்தில் குளித்தலைசெல்லும் டவுன்பஸ்சில் ஏறி பயணம் செய்தேன் . அந்த பேருந்து சிறுகமணி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கிவிட்டு கொண்டு இருந்தார்கள். அப்போது எங்களது பேருந்துக்கு பின்னால் வந்த கோயம்புத்தூர் செல்லும் அரசு பேருந்து TN-38. 2729 என்ற பேருந்து வேகமாக வந்து நான் பயணம் செய்த பேருந்தின் பின்புறம் மோதி விபத்து ஏற்பட்டது . அந்த விபத்தில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்னுடன் பயணம் செய்த சில பயணிகளுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. நான் பேருந்தைவிட்டு கீழே இறங்கி பார்த்துக்கொண்டு இருந்தேன் . அப்போது எங்கள் பேருந்தில் பயணம் செய்த ஜெயபிரகாஷ் என்பவர் பேருந்துக்கு உள்ளேயே காயம்பட்டு இறந்துவிட்டார் . விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநரை நான் சம்பவ சமயத்தில் பார்த்தேன். அவர் அங்கிருந்து ஓடிவிட்டார் . அவரை தற்போது பார்த்தால் 12 வருடங்கள் ஆகிவிட்டதால் அடையாளம் காட்ட இயலாது . போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**நான் சென்ற பேருந்து வடபுறம் , தென்புறம் எவ்வளவு அடி தள்ளி நின்ற விவரம் எனக்கு தெரியாது . எனக்கு எதுவும் காயம் இல்லை . போலீசார் விசாரணையில் நான் பயணம் செய்ததற்கான பயணச்சீட்டை கொடுக்கவில்லை. பொதுவாக முன்னாடி செல்லும் பேருந்து சிக்னல் கொடுத்து நின்றிருந்தால் விபத்தை தடுத்திருக்காலம் என்றால் சரிதான் . இடித்த பிறகுதான் சம்பவத்தை பற்றி தெரிந்துக்கொண்டேன். பொதுவாக அந்த நேரத்தில் யார் மீது தவறு என்று சொல்லமுடியாது என்றால் சரிதான் . நான் பேருந்தில் பயணம் செய்யவில்லை அதனால்தான் போலீசார் விசாரணையில் பயணச்சீட்டை கொடுக்கவில்லை**

**என்றால் சரியல்ல. நான் சென்ற பேருந்து தீடிரென எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் நின்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல . நான் சென்ற பேருந்து எந்த பகுதியில் நின்றது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் சம்பவத்தை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.